அனுப்புநர்: நாள்:- 24-7-2010

C. செல்வராஜ்
55, இரயில்வே பார்டர் ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033

பெறுநர்:

செயலர்
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (OP) துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 9

அய்யா,

பொருள்:- தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 - தேதி வாரியாக இச் சட்டத்தை அமல் செய்த தகவல் மறுக்கப்பட்டது - பொது தகவல் அலுவலர் மற்றும் மேல் முறையீட்டு அலுவலர் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக

பார்வை:- 1. தமிழக தகவல் ஆணைய வழக்கு எண் 1003383/01/10 நாள் 2.7.2010
2. வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை மடல் எண் 17869/OP1-2/2010-1 நாள் 20.7.2010

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 4 மற்றும் 5 னை அமல் படுத்திய விவரத்தை தேதி வாரியாக வழங்குமாறு கேட்கப் பட்டது. ஆனால் முறையான தகவல் வராமையால் மேல் முறையீடு செய்து அதற்கும் தகவல் கிடைக்காமையால் இரண்டாம் மேல் முறையீடு தகவல் ஆணையத்திற்கு 8.2.10 அன்று செய்யப் பட்டது.

ஆணையத்தி-ருந்து பார்வை ஒன்றின்படி தகவல் கொடுக்கச் சொல்- பணித்தும், முறையான தகவல் கிடைக்கவில்லை. பார்வை இரணடில் கொடுத்துள்ள தகவல் ஏற்கனவே உங்கள் அலுவலகத்தி-ருந்து மடல் எண் 33403/OP1-2/09-1 நாள் 27.01.2010 ல் கிடைத்துள்ளது. அதில் நான் தகவல் கேட்டு அனுப்பிய எந்த மடலும் அவ்வலுவலகம் வந்து சேரவில்லை என்றும், இருந்தும் திரு. பி. குணசீலன், உதவி செயலர் அவர்கள் பெருந்தன்மையுடன் தகவல் கொடுப்பது போல உண்மைக்கு புறம்பாக வர்ணித்து எழுதியுள்ளார். அது கேட்கபட்ட தகவலுக்கு முழுமையானதாக இல்லை என்றுதான் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந் நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளாத தமிழக தகவல் ஆணையம் பார்வை 1 ல் கண்ட படி பொது தகவல் அதிகாரிக்கு தகவல் கொடுக்கும் படி பணித்துள்ளது. ஆனால் பொது தகவல் அதிகாரி திரு. A.S. சௌரிநாரயணன் அவர்கள் பார்வை இரண்டில் அனுப்பிய மட-ல் நான் கேட்டுள்ள தகவல்களை தராமல் மீண்டும் முத-ல் அனுப்பிய தகவ-ன் நகலையே கொடுத்துள்ளார்.

இதி-ருந்து தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை அறிந்து, அதை மதிக்காமல் செயல்படுகிறார்களா? அல்லது இச்சட்டத்தை அறியாமலேயே செயல்படுகிறார்களா? என்பது தெரியவில்லை. மேலும் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதையே சிறிதும் அறிந்தது போல தெரியவில்லை. ஏனென்றால் இச் சட்ட விதி 4 மற்றும் 5 ல் தங்கள் துறையில் செயல்படுத்திய விவரங்களை தேதி வாரியாக கேட்டுள்ளேன். ஆனால் முரண்பாடாக முத-ல் கொடுத்த தகவலையே மீண்டும் கொடுத்துள்ளார். மனுதாரர் என்ன கோரியுள்ளார் என்பதை தெரிந்துகொள்ள முயற்சிக்காமலேயே செயல்பட்டிருப்பது அவரது பொறுப்பின்மையை வெளிக்காட்டுவதாக உள்ளது.

அரசின் தலைமைச் செயலகத்திலுள்ள ஒரு சார்புச் செயலர் இவ்வாறு தகவல் கொடுப்பது அவரது ஒழுங்கீனத்தை காட்டுவதாக உள்ளது. இம்மாதிரி சார்புச் செயலர், பொது தகவல் அதிகாரியாக இருந்தால் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005ல் மனுச் செய்யும் மக்களுக்கு எப்படி தகவல் கிடைக்கும் என்பதை எண்ணும் போது அரசின் செயல்பாட்டில் உள்ள வெளிப்படைத் தன்மை கேள்விக்குறியாகி உள்ளது.

17.11.09 ல் கொடுத்த தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுவுக்கு இன்று வரை உரிய முறையில் தகவல் கொடுக்க தெரியாத, கொடுக்க இயலாத, சட்டத்தை, ஆணையத்தை மதிக்காத இச் சார்புச் செயலரை கொண்டு எவ்வாறு இத்துறை இயங்குகிறது என்பது மிகவும் வியப்பான ஒன்று.

ஆகையால் இவ்வாறு முரண்பாடாகவும் சட்டத்தை உதாசீனப் படுத்தியும் செயல்படும் சார்புச் செயலர் திரு. A.S. சௌரிநாரயணன் மீது தக்க நடவடிக்கை எடுத்து, தகவல் உரிமைச் சட்டத்தை மதிக்கும் தன்மையையும் மனப்பான்மையையும் உருவாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

C. செல்வராஜ்

நகல் : சட்ட பிரிவு 4 மற்றும் 5 ன் படி முறையான தகவல்
மறுக்கபட்டிருப்பது தொடர்பாக, அரசின்
அனைத்து துறை செயலாளர்களுக்கும் தகவலுக்காகவும்
உரிய நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

Mailed by - Harsha 28/7/2010